# இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு-2020

## பன்னிரெண்டாம் வகுப்பு

Reg.No. | | | | | | |

*நேரம்: 3.00 மணி*

## பொருளியல்

*மதிப்பெண்கள்: 90*

### பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 20 x 1 = 20

1. பேரியல் பொருளாதாரத்தின் வேறு பெயர் யாது?
   a) விலை கோட்பாடு b) அங்காடி கோட்பாடு
   c) வருவாய் கோட்பாடு d) நுண்ணியல் கோட்பாடு
2. ________ துறையில் செலவு முறையில் தேசிய வருவாய் மதிப்பிடப்படுகிறது?
   a) கட்டடத்துறை b) விவசாயத்துறை c) பணித்துறை d) வங்கித்துறை
3. ________ சமநிலையை கீன்ஸிடைய கோட்பாடு
   a) மிகக்குறுகிய காலம் b) குறுகிய காலம்
   c) மிக நீண்ட காலம் d) நீண்ட காலம்
4. கீன்ஸின் கருத்துப்படி முதலீடு MEC ஐயும் ________ சார்ந்தது.
   a) தேவையையும் b) அளிப்பையும்
   c) வருவாயையும் d) வட்டி வீதத்தையும்
5. ________ என்பது பண வீக்க விகிதம் குறைந்து செல்வது ஆகும்.
   a) எதிர் பண வீக்கம் b) பண வாட்டம் c) தேக்க வீக்கம் d) மந்தம்
6. ஏற்றுமதி, இறக்குமதி வங்கி எப்பொழுது துவங்கப்பட்டது?
   a) ஜுன் 1982 b) ஏப்ரல் 1982 c) மே 1982 d) மார்ச் 1982
7. அயல்நாட்டு செலுத்து நிலைக் கூறுகள் கீழ்க்கண்டவைகளில்
   a) நடப்பு கணக்கு b) மைய வங்கி இருப்பு
   c) மூலதன கணக்கு d) மேற்கூறிய அனைத்தும்
8. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம்
   a) வங்கி b) அணு ஆற்றல் c) மருந்து உற்பத்தி d) காப்பீடு
9. காப்புரிமை பதிப்புரிமை வாணிக ரகசியம் போன்றவை ________ உடன் தொடர்புடையவை.
   a) வணிகம் சார் சொத்துரிமை b) வணிகம் சார்ந்த முதலீட்டு வழிமுறைகள்
   c) காட்ஸ் d) NAMA
10. சார்க் வேளாண் தகவல் மையம் துவங்கிய ஆண்டு ________.
    a) 1985 b) 1988 c) 1992 d) 1998
11. கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளில் எது சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி.
    i) ஜனாதிபதியால் நிதிக்குழு பணியமர்த்தப்படுகிறது.
    ii) ஒரு நிதிக்குழுவின் காலம் 5 ஆண்டுகள்
    a) (i) மட்டும் b) (ii) மட்டும் c) இரண்டும் d) இரண்டும் இல்லை
12. கீழ்க்கண்டவற்றுள் சரியாக பொருந்தாத ஒன்றை தெரிவு செய்க:
    a) GST - பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி
    b) வரிவிதிப்பு விதிகள் - மார்ஷல்
    c) VAT - மதிப்பு கூட்டப்பட்ட வரி
    d) IGST - மஹாராஷ்ரா

13. சுற்றுச்சூழல் பொருளியலின் அடிப்படை கருத்துக்களில் ஒன்றும், சந்தை தோல்விக்கு காரணமானதும் ________ ஆகும்.
a) நேர்மறை புற விளைவுகள்
b) எதிர்மறை புற விளைவுகள்
c) இரண்டும்
d) மேற்சொன்ன எதுவுமில்லை

14. பின்வரும் எது உலக வெப்பமயமாதலுக்குக் காரணம்?
a) பூமியின் ஈர்ப்பு விசை
b) ஆக்ஸிஜன்
c) மையநோக்கு விசை
d) வெப்பநிலை அதிகமாதல்

15. கீழ்க்கண்டவற்றுள் எவை பின்தங்கிய நாடுகளின் பண்புகளில் ஒன்றாகும்?
a) வறுமையின் நச்சு சுழற்சி
b) பெரும் நுகர்வை அதிகப்படுத்துதல்
c) தொழில் சாலைகள் வளர்ச்சி
d) அதிக அளவில் நகர்மயமாதல்

16. நிதி ஆயோக் கீழ்க்கண்ட எதன் மூலமாக அமைக்கப்பட்டது?
a) குடியரசு தலைவரின் அவசர ஆணை
b) குடியரசு தலைவரின் அறிக்கை
c) அமைச்சரவைத் தீர்மானம்
d) இவை எதுவுமில்லை

17. $Y = 2 - 0.2x$ எனில் Y அச்சு வெட்டு
a) $-0.2$ b) 2 c) $0.2x$ d) மேற்சொன்ன அனைத்தும்

18. பொருளாதார அளவையியலுக்கான மூலப்பொருள் ________.
a) புள்ளி விவரம் b) பொருட்கள் c) புள்ளியியல் d) கணிதம்

19. பதினைந்து நிதிக்குழுவின் தற்பொழுது தலைவர் யார்?
a) C.ரங்கராஜன்
b) N.K.சிங்
c) Dr.Y.V.ரெட்டி
d) K.C.பந்த்

20. சாதகமான அயல்நாட்டுச் செலுத்து நிலை ________.
a) $R / P = 1$ b) $R / P < 1$ c) $R / P > 1$ d) $R / P = 0$

## பகுதி - II

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 30 கட்டாய வினா)* 7 x 2 = 14

21. பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக.
22. தேசிய வருவாய் கணக்கீட்டில் “சுய நுகர்வு” எவ்வாறு சிரமத்தைத் தருகிறது?
23. ”விளைவுத் தேவை” என்றால் என்ன?
24. இறுதிநிலை சேமிப்பு நாட்டம் (MPS) - வரையறு.
25. பொன் திட்டம் என்றால் என்ன?
26. வெளி அங்காடி நடவடிக்கை என்றால் என்ன?
27. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?
28. உலக வங்கிக் குழுமத்தின் கீழ் செயல்படும் இரண்டு துணை நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
29. “பூஜ்ய அடிப்படை வரவு செலவுத் திட்டம்” - குறிப்பு வரைக.
30. பொருளாதார அளவையியல் என்றால் என்ன?

## பகுதி - III

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண் 40 கட்டாய வினா)* 7 x 3 = 21

31. கலப்பு பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.
32. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறுகுறிப்பு எழுதுக.

33. தொகு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளைக் கூறுக.

34. [illegible] விளக்குக.

35. [illegible]

36. பண மதிப்பு நீக்கத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

37. வாணிப கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டுச் செலுத்து நிலைக்குமிடையேயான ஏதேனும் மூன்று வேறுபாடுகளைப் பட்டியலிடுக.

38. வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக.

39. குறிப்பு வரைக: அ) பருவநிலை மாற்றம் ஆ) அமில மழை

40. திட்டவிலக்கத்தினை காண் : 14, 22, 9, 15, 20, 17, 12, 11

## பகுதி - IV

7 x 5 = 35

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

41. a) நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.

*(அல்லது)*

b) தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை?

42. a) சேயின் அங்காடி விதியினைத் திறனாய்வு செய்க.

*(அல்லது)*

b) கீன்ஸின் நுகர்வு சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

43. a) வணிக சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரி.

*(அல்லது)*

b) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.

44. a) ஒப்புமைச் செலவு கோட்பாட்டினை விவரி.

*(அல்லது)*

b) உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க.

45. a) கடன் திரும்பச் செலுத்தும் முறைகளை விளக்குக.

*(அல்லது)*

b) புற விளைவுகள் என்ற கருத்தினையும், அதன் வகைப்பாடுகளையும் விளக்குக.

46. a) பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும்.

*(அல்லது)*

b) இயற்கைப் பண்ணை முறையின் பொதுவான கொள்கைகள் யாவை?

47. a) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினைக் கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேவை X | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| விற்பனை Y | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

*(அல்லது)*

b) புள்ளியியலின் இயல்பு மற்றும் எல்லைகளை விளக்குக.

******

Padasalai

Scanned by CamScanner